1992 மார்ச் 13]

நிரந்தரக் கட்டிடம் கட்டுவதற்கு பொது மக்கள் அல்லது பஞ்சாயத்து யூனியன் தங்களது சொந்த நிதியிலிருந்து தொகை அளிக்க முன்வந்தால், தேவையான ஏற்பாடுகள் செய்து தரப்படும்.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் பெருமான் சொன்னதைப்போல அந்தப் பஞ்சாயத்துக் கட்டிடத்திலே ஒரு நூலகமும், அதைப் போல ஒரு கிளை கால்நடை நிலையமும் இயங்கி வருகின்றன. அதற்காக கட்டிடத்திற்கான நில ஒதுக்கீட்டை அந்த ஊரைச் சேர்ந்தவர்கள் கொடுத்திருக்கிறார்கள். அதைப்போல அந்த ஊரைச் சேர்ந்தவர்கள் அது சம்பந்தமான தேவையான பணமும் கட்டுவதற்கு தயாராக இருக்கிறார்கள். ஆதலால் அதைத் துரிதமாக கட்டிக் கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் இங்கே உறுதி அளிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-20

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக் காலத்தில் ஊரக வளர்ச்சித் துறையின் மூலமாக ஜவஹர் யோஜனா நிதியிலிருந்து இவைகளுக்கு நிரந்தரக் கட்டிடம் படிப்படியாக (in a phased manner) கட்டுவதற்கு தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 216, திரு. தி. சாத்தையா, மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.

216—

புதிய கால்நடை மருத்துவ மனை.

*3779 திரு. தி. சாத்தையா :

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

இராஜபாளையம் தொகுதியில் எஸ். ராமலிங்கபுரம் கிராமத்தில் புதிதாக கால்நடை மருத்துவமனை அமைத்துத்தர அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

[1992 மார்ச் 13

திரு. தி. சாத்தையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய ராஜபாளையம் தொகுதியில் உள்ள எஸ். ராமலிங்காபுரம் மற்றும் அதன் சுற்றுப்புறத்திலுள்ள கோபாலபுரம், குறுச்சியார்பட்டி, சிவலிங்கபுரம், வடகரை போன்ற கிராமங்களில் உள்ளவர்கள், குறிப்பாகத் தாய்மார்கள் பசு மாடுகளை வளர்த்து, அதன்மூலம் வருவாயை ஈட்டி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். எஸ். இராமலிங்காபுரத்தைச் சுற்றியுள்ள கிராமங்களில் கிட்டத்தட்ட 10,000-க்கும் மேலான கால்நடைகள் இருப்பதால் அங்கு ஒரு கால்நடை மருத்துவமனை அமைக்க, இந்த வருஷம் இல்லாவிட்டாலும், வரும் நிதி ஆண்டிலாவது அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ராஜபாளையம் ஒன்றியத்திலிருந்து கால்நடை மருத்துவமனை அமைப்பதற்கான தீர்மானத்தைப் போட்டு, முழு வடிவில் பிரேரணையை அனுப்பி வைக்கு மாறு விருதுநகர் மண்டல இணை இயக்குநரிடம் கேட்கப் பட்டுள்ளது. பிரேரணை வருமானால் எஸ். ராமலிங்கா புரம் கிராமத்தில் கால்நடை மருந்தகம் துவக்குவது குறித்து பரிசீலிக்கப்படும்.

திரு. தி. சாத்தையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எஸ். ராமலிங்காபுரத்தில் கால்நடை மருத்துவ மனையை பெர்மனன்டாக அமைப்பதற்கு முன்னால் டெம்பரரியாக வாரத்திற்கு ஒருமுறை மொபைல் கால்நடை மருத்துவமனை செட்டப் வந்தால், அங்கேயுள்ள கால்நடை களுக்கு நன்மையாக இருக்கும். இதற்கு ஆவன செய்யப் படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 217, திருமதி என். சி. கனகவல்லி, மாண்புமிகு மீனளத்துறை அமைச்சர்.

விளாத்திக்குளம் மீனவர்களுக்கு படகுகள்.

217—

*4938 திருமதி என். சி. கனகவல்லி ;

மாண்புமிகு மீனளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

விளாத்திக்குளம் தொகுதி மீனவர்களுக்கு படகுகள், மீன்பிடி சாதனங்கள் கிடைக்க அரசு ஆவன செய்யுமா?